


# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"




Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 350 12.06.2026 FRIDAY VAIKASI : 29 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 350 12.06.2026 வெள்ளிக்கிழமை வைகாசி : 29 விலை : ரூ.5/-

## "ஸ்ரீவைகுண்டம் எம்எல்ஏவை கைது செய்ய திராணி இருக்கிறதா?"

# "விஜய்க்கு இபிஎஸ் சவால்"



## மாநிலங்களவை எம்.பி.யாக பிரவீன் சக்கரவர்த்தி போட்டியின்றி தேர்வு

சென்னை: ஜூன்.12-

தமிழகத்திலிருந்து மாநிலங்களவைக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் காங்கிரஸ் கட்சியை சார்ந்த பிரவீன் சக்கரவர்த்தி போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சட்டப்பேரவைச் செயலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழ்நாட்டிலிருந்து மாநிலங்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் சி.வி.சண்முகம் 07.05.2026 அன்று தனது உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்ததால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு, தமிழ்நாடு சட்டப்பேரவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை வாக்காளர்களாகக் கொண்டு ஜூன், 2026 இல் நடைபெற்ற இடைத் தேர்தலில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியை சார்ந்த பிரவீன் சக்கரவர்த்தி முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம், மயிலம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இதனால், தான் ஏற்கெனவே வகித்து வந்த மாநிலங்களவை எம்.பி. பதவியை ராஜினாமா செய்தார். இதனால், தமிழகத்தில் அந்த ஒரு இடத்துக்கான இடைத்தேர்தல் ஜூன் 18ம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

தமிழகத்தில் பிரதிநிதித்துவ அடிப்படையில் அதிக எம்எல்ஏக்களைக் கொண்ட தவெகவுக்கு மாநிலங்களவை எம்.பி. பதவி ஒதுக்கப்பட வாய்ப்பு இருந்தது. ஆனால், கூட்டணிக் கட்சியான காங்கிரஸுக்கு மாநிலங்களவை எம்.பி. இடத்தை ஒதுக்குவதாக தவெக தலைவரும், முதல்வருமான விஜய் அறிவித்தார். இதையடுத்து, மாநிலங்களவைத் தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளராக பிரவீன் சக்கரவர்த்தி அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

சென்னை: ஜூன்.12-

"ஸ்ரீவைகுண்டம் பெண்ணுக்கு நடந்த பாலியல் வன்கொடுமைக்கு வக்காலத்து வாங்கி சமரசம் பேசி மறைக்க முயன்ற தவெக எம்எல்ஏ சரவணனை ராஜினாமா செய்ய வைத்து, கைது செய்ய இன்றைய முதல்வருக்கு தெம்பு, திராணி இருக்கிறதா?" என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வினவியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் பகுதியில் இன்றைய முதல்வரின் ரசிகையான பெண் ஒருவர் ஆளுங்கட்சி தவெக நிர்வாகிகளால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டதாக வரும் செய்தி அதிர்ச்சி அளிக்கிறது.

ஸ்ரீவைகுண்டம் தவெக எம்எல்ஏ சரவணன் ஆதரவில், இந்த கொடூரத்தை ஆளுங்கட்சியைச் சேர்ந்த இருவர் அரங்கேற்றியுள்ளதாக தெரிகிறது. மேலும், இதனை மறைக்க, தவெக எம்எல்ஏ சரவணனே அந்த பெண்ணிடம் "அமைச்சரிடம் பேசி வேலை வாங்கித் தருவதாக" சமரசம் பேசியதாக செய்திகள் வருகிறது.



'சிங்கப்பெண்' அதிரடிப் படைக்கான முதல் வழக்கே ஆளுங்கட்சி வழக்கா?. அதுவும், ஒரு ஆளுங்கட்சி எம்எல்ஏ இப்படி கேடுகெட்டத்தனமான செயலுக்கு சமரசம் பேசுவதை இன்றைய முதல்வர் ஏற்றுக்கொள்கிறாரா?. உங்களை திரையில் ரசித்து வளர்ந்த பெண்ணுக்கு, உங்கள் ஆட்சியில், உங்கள் கட்சியினரால் நடைபெற்றுள்ள இந்த கொடுமைக்கு பதில் சொல்ல வேண்டிய கடமை உங்களுக்கு உள்ளதை உணர்கிறீர்களா?.

"அமைச்சருக்கு தெரியும்; மேலிடத்திற்கு தெரியும்" என்றெல்லாம் தெனாவட்டு பேச்சுகள் வருகிறது என்றால், அப்படி என்ன மேலிடம்? யார் அது? முதல்வரா? அல்லது, முதல்வரைத் தாண்டிய ஏதேனும் பவர் சென்டரா?.

'சிங்கப்பெண்' அதிரடிப் படை துவக்க விழாவில் ஒரே டேக்கில் பேசிய வசனங்களை எல்லாம் உங்கள் கட்சியினரைப் பார்த்து பேசுங்கள் முதல்வர் விஜய். பாலியல் வன்கொடுமைக்கு வக்காலத்து வாங்கி சமரசம் பேசி மறைக்க முயன்ற உங்கள் கட்சி எம்எல்ஏவை பதவி ராஜினாமா செய்ய வைத்து கைது செய்ய இன்றைய முதல்வருக்கு தெம்பு, திராணி இருக்கிறதா?.

மேலும், வேறொரு பெண்ணுக்கும் இக்கொடுமை நடந்துள்ளதாக பாதிக்கப்பட்ட பெண் கூறியுள்ளதாக செய்திகள் வருகின்றன. அதனால், இந்த வழக்கை எந்த அரசியல் இடையூறுக்கும் இடமின்றி விசாரித்து, குற்றம் இழைத்தவர்கள் மீதும், குற்றத்திற்கு துணை போனோர் அனைவர் மீதும், அது யாராக இருந்தாலும் சரி, எந்த எம்எல்ஏவாக, அமைச்சராக இருந்தாலும் சரி, கைது செய்து கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசை வலியுறுத்துகிறேன்," எனத் தெரிவித்துள்ளார்.

## 15 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு

சென்னை, ஜூன்.12-

சென்னை வானிலை ஆய்வு மையம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

மத்திய வங்கக்கடல் முதல் கடலோர ஆந்திரா, தெலங்கானா, உள் கர்நாடகா வழியாக கடலோர கர்நாடகா வரை சுமார் 3.1 கி.மீ. முதல் 5.8 கி.மீ. உயரத்தில் வளிமண்டல காற்றழுத்த தாழ்வுப் பாதை நிலவுகிறது. இதன் காரணமாக, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் ஒருசில இடங்களில் இன்று இடி, மின்னலுடன் மிதமானது முதல் கனமழை பெய்யக்கூடும்.திருநெல்வேலி, கோவை மாவட்ட மலைப் பகுதிகள், கன்னியாகுமரி, நீலகிரி, வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, ஈரோடு, சேலம், ராணிப்பேட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கனமழை பெய்யக்கூடும். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.



### இந்து சமய அறநிலையத்துறை

# செயல் அலுவலர்களுக்கு பதவி உயர்வு எப்போது?

### தமிழக முதல்வருக்கு பகவான் பவுண்டேஷன் கோரிக்கை!

சென்னை, ஜூன்.12-

தமிழகத்தில் உள்ள அனைத்து கோவில்களையும், கோவில் சொத்துக்களையும் பராமரித்து வரும் இந்து சமய அறநிலையத்துறையில் இணை ஆணையர், துணை ஆணையர், உதவி ஆணையர் ஆகியோர்களுக்கு பதவி உயர்வு அவ்வப்போது வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் செயல் அலுவலர்கள் மற்றும் கண்காணிப்பாளர்களுக்கு கடந்த 16 மாதங்களாக பதவி உயர்வு செய்யப்படாமல் இருப்பதால், சிலர் பதவி உயர்வுக்கு முன்பே பணி ஓய்வு பெறும் நிலையில் உள்ளனர்.



முதல் நிலை செயல் அலுவலர் ஒருவர் பதவி உயர்வு பட்டியலில் பெயர் இருந்தும், உரிய நேரத்தில் பதவி உயர்வு வழங்காததால் இறப்பை சந்திக்க நேரிட்டுள்ளது.

பதவி உயர்வு கடந்த 16 மாதங்களாக வழங்காமல் இருப்பதால் அவர்களின் சர்வீஸ் பாதிக்கப்படுவதுடன், பல கோவில்களில் கூடுதல் பொறுப்பு செயல் அலுவலர்களே அதிகப் பளுவுடன் பணிபுரிந்து வருகிறார்கள். இதனால் அந்தந்த கோவில்களுக்கு உள்ள நிலங்கள், கடை வாடகைகள், தரைக் கடை வாடகைகள் ஆகிய குத்தகைத் தொகைகள் வசூலிக்கப்படாமல் நிலுவையில் உள்ளது. அதோடு மட்டுமில்லாமல், சரியாக பராமரிக்க முடியாமல் சில கோவில்கள் தகுதி இறக்கமும் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சியில் இந்து சமய அறநிலை துறை ஆணையர் சுதந்திரமாக செயல்பட முடியாமல், அரசியல்வாதிகளின் நெருக்கடி காரணமாக செயல் அலுவலர்களை தன்னிச்சையாக பதவி உயர்வு செய்ய முடியாமல் போனது. 2023-2024, 2024-2025, 2025-2026 ஆகிய ஆண்டுகளுக்குரிய செயல் அலுவலர்களின் பதவி உயர்வு பட்டியல் அவ்வப்போது தயார் செய்யப்பட்டதே தவிர, பதவி உயர்வு இதுவரை வழங்கப்படவில்லை.



அமைச்சர் ரமேஷ்

செயல் அலுவலர்களுக்கு சீனியாரிட்டி பாதிக்கப்படுவதுடன், பண பலன்களும் கிடைக்காமல் இருந்து வருகிறது. கடந்த 16 மாதங்களாக செயல் அலுவலர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படாமல் இருந்து வருவதால், பல செயல் அலுவலர்கள் பெருத்த மன உளைச்சலுக்கு ஆளாகி இருப்பதுடன், தங்களது அங்கீகாரம், இன்று வருமோ? நாளை வருமோ? என்று காத்துக்கிடக்கின்றனர்.

கடந்த ஆட்சியில் தான் இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் கைகள் அரசியல்வாதிகளால் கட்டப்பட்டு இருந்ததால், பதவி உயர்வு வழங்க முடியாமல் இருந்தனர் என்பது அனைவரும் தெரிந்த ஒன்றே.

இதற்கு முன்பு 2020 காலகட்டத்தில் இந்து சமய அறநிலைய துறை ஆணையராக இருந்த குமரகுருபரன், ஒரு அதிகாரிக்கு பதவி உயர்வு காலம் வந்த உடனேய பதவி உயர்வு அளித்து வந்தார். அப்போது துறை அலுவலர்களுக்கு பதவி உயர்வு என்ற பிரச்சினையே இருந்தது கிடையாது. பதவி உயர்வு வரும் பட்சத்தில் உடனுக்குடன் பட்டியல் வெளியிட்டுக் கொண்டிருந்தார் அப்போது ஆணையர் குமரகுருபரன்.

குமரகுருபரன் ஆணையராக இருந்தவரை தமிழக இந்து சமய அறநிலையத்துறையில் வருவாயும் நல்ல முறையில் ஈட்டப்பட்டு வந்ததுடன், பணியாளர்களுக்கும் எந்த பிரச்சனையாக இருந்தாலும் உடனுக்குடன் தலையிட்டு நிவர்த்தி செய்து வந்தார் என்பது இந்து சமய அறநிலையத்துறை வட்டாரத்தில் அனைவரும் அறிந்த ஒன்று. கடந்த 16 மாதங்களாக இந்து சமய அறநிலையத்துறை செயல் அலுவலர்களுக்கும், கண்காணிப்பாளர்களுக்கும் பதவி உயர்வு வழங்காமல் இருந்து வருவதால், விரக்தியின் விளிம்பில் தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர்.



செயலாளர் குமரகுருபரன்



ஆணையர் T.G.வினய்

எனவே தமிழக முதல்வர் முதல்வரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், துறைச் செயலாளரும் மற்றும் ஆணையரும் தனிக் கவனம் செலுத்தி, தயார் செய்து வைத்துள்ள செயல் அலுவலர்களின் பதவி உயர்வு பட்டியலை வெளியிட வேண்டும் என பகவான் பவுண்டேஷன் நிறுவனர் பாடாலூர் பாண்டி கோரிக்கை விடுத்துள்ளார்.



நிறுவனர் பாடாலூர் பாண்டி



## விவசாயியின் அசராத நேர்மை! சாலையில் கிடந்த 100 கிராம் தங்க நகையைக் காவல் நிலையத்தில் ஒப்படைத்த ரத்தினவேல் பாண்டியன்!

கடையநல்லூர், ஜூன்.12-
தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் 15 லட்சம் ரூபாய் மதிப்புள்ள தங்க நகையைத் தவறவிட்ட உரிமையாளரிடம் ஒப்படைத்த விவசாயிக்குக் கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் தி.மு. இராசேந்திரன் நேரில் பாராட்டு தெரிவித்துள்ளார். கடையநல்லூர் இஸ்லாமியக் குடும்பத்தைச் சேர்ந்த பெண் ஒருவரின் திருமணத்திற்காகக் குடும்பத்தினர் சேர்த்து வைத்திருந்த 100 கிராம் எடை கொண்ட, இன்றைய மதிப்பில் சுமார் 15 லட்சம் ரூபாய் மதிப்புள்ள தங்க நகை, கடையநல்லூர் நகர பிரதானச் சாலை வழியாகச் செல்லும்போது இருசக்கர வாகனத்திலிருந்து தவறி விழுந்துள்ளது. அந்த வழியாகச் சென்ற சுந்தரேசபுரம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ரத்தினவேல் பாண்டியன் அதை எடுத்துப் பார்த்துத் தங்க நகை எனத் தெரிந்ததும், நேரடியாக நகர் காவல் நிலையத்திற்குச் சென்று ஒப்படைத்தார். காவல் துறையினர் நகைக்குரிய அடையாளங்களுடன் வந்த அதன் உரிமையாளரிடம் நகையை ஒப்படைத்த போது, நகையைப் பறிகொடுத்தவர்கள் குடும்பத்துடன் வந்து கண்ணீர் மல்க அதனைப் பெற்றுக்கொண்டு நன்றி தெரிவித்ததோடு, இது பற்றித் தகவல் அறிந்த கடையநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தி.மு. இராசேந்திரன், நேர்மையாக நடந்து கொண்ட விவசாயி இரத்தினவேல் பாண்டியனை நேரில் பாராட்டி வாழ்த்தினார் என்பது உட்படப் பல்வேறு தரப்பிலிருந்தும் பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன.

## 'சிங்கப்பெண்' பிரிவு எதற்கு? ஸ்ரீவைகுண்டம் சம்பவத்தை சுட்டிக்காட்டி உதயநிதி கேள்வி



சென்னை, ஜூன்.12-
ரீல்ஸ் எடுத்து போஸ்ட் செய்யத் தான் 'சிங்கப்பெண்' பிரிவை முதல்வர் உருவாக்கினாரா? என்று ஸ்ரீவைகுண்டம் சம்பவத்தை சுட்டிக்காட்டி எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார். மேலும், பாதிக்கப்பட்டப் பெண்ணிற்கு முழுமையான நீதி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "உண்மையிலேயே பெண்கள் பாதுகாப்பில் முதல்வருக்கு அக்கறை இருக்கிறதா?" என்று தமிழ்நாட்டுப் பெண்களை எல்லாம் கொதிப்படைய வைத்துள்ளது ஸ்ரீவைகுண்டத்தில் முதல்வர் விஜயின் ரசிகை ஒருவருக்கு நடந்துள்ள அநீதி. அந்தப் பெண்ணை ஸ்ரீவைகுண்டம் தவெக எம்எல்ஏ சரவணனுக்கு நெருக்கமான அக்கட்சி நிர்வாகிகள் இருவர், வேலை வாங்கித்தருவதாகக் கூறி காரில் அழைத்துச் சென்று பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர்.அமைச்சர் புஸ்ஸி ஆனந்திடம் பேசி உனக்கு வேலை வாங்கித் தருகிறேன் என்று எம்எல்ஏ சரவணன் சமரசம் பேச முயன்றதாக பாதிக்கப்பட்டப் பெண் கூறியுள்ளார். இதேபோல், இன்னொரு பெண்ணும் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்தப் பெண் கூறுகிறார். இன்னொரு அமைச்சருக்கும் இந்தப் பிரச்சினை தெரியும் என்கிறார். எல்லாம் மேலிடத்துக்கு தெரியும் என்று குற்றவாளிகள் கூறியதாகவும் சொல்லி உள்ளார்.ஆளுங்கட்சியில் "யார் அந்த மேலிடம்" என்று மக்கள் கேட்கின்றனர். 'தனிமனித ஒழுக்கம்' பற்றி பாடமெடுத்துள்ள முதல்வரின் ஒட்டுமொத்த #SofaModel அரசும், இந்த விவகாரத்தை மூடிமறைக்க முயன்றுள்ளது. குற்றத்தை செய்தவர்களை பாதுகாக்க முயன்றதோடு மட்டும் இல்லாமல், பாதிக்கப்பட்ட பெண்ணை கட்சியில் இருந்தும் நீக்கி இருக்கிறார்கள். பாலியல் வன்கொடுமை செய்திகளை கேட்கும் போதெல்லாம் நெஞ்சம் கலங்குகிறது,பதறுகிறது என்று 2 நாட்கள் முன்பு முதல்வர் பேசினார். ஆனால், தன் கட்சியைச் சேர்ந்த தவெக ஆட்களே பாலியல் வன்கொடுமை செய்தால், பாதிக்கப்பட்ட பெண் மீது நடவடிக்கை எடுக்கிறார். ரீல்ஸ் எடுத்து போஸ்ட் செய்யத்தான் 'சிங்கப்பெண்' பிரிவை முதல்வர் உருவாக்கினாரா?இந்தக் கேள்விகளுக்கு முதல்வர் என்ன பதில் வைத்திருக்கிறார்? ஸ்ரீவைகுண்டத்தில் பாதிக்கப்பட்டப் பெண்ணிற்கு முழுமையான நீதி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். குற்றவாளிகளுக்கு ஆதரவாக செயல்பட்ட எம்எல்ஏ சரவணன் உடனடியாக பதவியில் இருந்து நீக்கப்பட வேண்டும். அவருக்கு ஆதரவாக இருந்த ஆளுங்கட்சி மேலிட புள்ளிகள் யாரென்று விசாரித்து அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## திமுகவைப் போலவே 4 பேர் பிடியில் பாஜக: அமர்பிரசாத் ரெட்டி குற்றச்சாட்டு



சென்னை, ஜூன்.12-
திமுகவைப் போலவே 4 பேர் பிடியில் பாஜக இருக்கிறது என அக்கட்சியிலிருந்து விலகிய அமர் பிரசாத் ரெட்டி குற்றம் சாட்டி உள்ளார்.
பாஜகவின் முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை 'வீ த லீடர்ஸ்' என்ற புதிய இயக்கத்தைத் தொடங்கியுள்ள நிலையில், தமிழக பாஜகவின் முக்கிய நிர்வாகியான அமர்பிரசாத் ரெட்டி அக்கட்சியிலிருந்து விலகி அண்ணாமலையுடன் இணைந்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள வீடியோ பதிவில், பாஜக தலைமை மீது அடுக்கடுக்கான புகார்களை முன்வைத்துள்ளார். வீடியோவில் அமர்பிரசாத் ரெட்டி கூறியிருப்பதாவது: கடந்த 2013ம் ஆண்டு பாஜகவில் இணைந்தேன். கடந்த ஓராண்டாக கட்சியின் செயல்பாடுகள் எனக்கு மிகுந்த வேதனையை அளித்தன. முன்னாள் தலைவர்கள் தமிழிசை சவுந்தரராஜன் மற்றும் எல்.முருகன் ஆகியோர் தேர்தல்களில் தோல்வியடைந்த போதும், அவர்களுக்கு ஆளுநர் பதவி மற்றும் மத்திய அமைச்சர் பதவி வழங்கி அங்கீகாரம் அளிக்கப்பட்டது. அண்ணாமலை தலைவராகப் பொறுப்பேற்ற போது 3 சதவீதமாக இருந்த வாக்கு வங்கியை 12 சதவீதமாக உயர்த்தினார். ஆனால், ஒரு கூட்டணிக்காக அண்ணாமலையை ஒரே இரவில் அதுவும் ஒரு மணி நேரத்தில் முடிவெடுத்து, அவரை தலைவர் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, நயினார் நாகேந்திரனை நியமித்தனர்.
திமுக ஒரு குடும்பத்தின் கட்டுப்பாட்டில் இருக்கிறது என்று நாம் சொல்கிறோம். ஆனால், தமிழக பாஜகவும் ஒரு நான்கு பேர் கொண்ட குழுவின் கையில் தான் சிக்கியுள்ளது. உண்மையில், பாஜகவும் திமுகவும் ஒன்றுதான். தோற்றவர்களுக்கே மீண்டும் மீண்டும் வாய்ப்பு வழங்கப்படுகிறது. இதில் ஏதோ ஒரு லாபம் இருப்பதாக நான் சந்தேகிக்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.



## புவனேஷ்வர் அருகே ஒரே தண்டவாளத்தில் வந்த 2 ரயில்களால் பரபரப்பு

புவனேஷ்வர், ஜூன்.12-
புவனேஷ்வர் அருகே ஒரே தண்டவாளத்தில் எதிரெதிரே வந்த இரண்டு ரயில்கள் வந்ததால் பெரும் பரப்பரப்பு ஏற்பட்டது. ஆனால் நல்வாய்ப்பாக ஒரு பெரும் ரயில் விபத்து நூலிழையில் தவிர்க்கப்பட்டது. ஒரே தண்டவாளத்தில் வந்த 2 ரயில்களிலுமே பயணிகள் இல்லை என்றும், பராமரிப்புப் பணிகளுக்காக காலி ரயில் பெட்டிகள் நகர்த்தப்பட்டபோது இந்தச் சம்பவம் நிகழ்ந்ததாகவும் கூறப்படுகிறது.குறைந்த வேகத்தில் நகர்த்தப்பட்ட அந்த காலி ரயில் பெட்டிகள், அதே இடத்தில் நின்றுகொண்டிருந்த மற்றொரு காலி ரயில் பெட்டிகளுக்கு மிக அருகில் சென்றன. ஆனால் அதிக போக்குவரத்து நெரிசல் மிகுந்த ஜார்படா என்ற மேம்பால பகுதியில் இந்த ஆபத்தான சூழல் உருவானதே அப்பகுதி மக்கள் பீதியடைய முக்கிய காரணம். இந்த சம்பவம் குறிப்பிட்ட 2 ரயில்களில் வந்த பயணிகள் மற்றும் அப்பகுதி மக்களிடையே பெரும் பீதியை ஏற்படுத்தியதாக ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர். முதற்கட்டத் தகவல்களின்படி, புவனேஸ்வரிலிருந்து மன்சேஸ்வரை (Mancheswar) நோக்கி ஒரு ரயிலும், அதேவேளையில், மற்றொரு ரயில் அதற்கு நேர்மாறான திசையிலும் ஒரே தண்டவாளத்தில் மோதி கொள்ளும் அபாயகரமான பாதையில் வந்து கொண்டிருந்தது கண்டறியப்பட்டது.இதனால் அங்கிருந்தவர்கள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டது, எனினும் இரண்டு ரயில்களும் பாதுகாப்பாக நிறுத்தப்பட்டன. இதற்கு சம்பவ இடத்தில் இருந்த ரயில்வே ஊழியர்களின் விரைவான செயல்பாடு மற்றும் ஒருங்கிணைப்பு காரணமாக கூறப்பட்டுள்ளது, இதன் காரணமாக ஒரு பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது. ரயில்கள் மெதுவான வேகத்தில் இயக்கப்பட்டு வந்த போது, ஒரே தண்டவாளத்தில் இரண்டு ரயில்கள் வருவதை 2 ரயில்களின் லோகோ பைலட்டுகளும், ரயில்வே ஊழியர்களும் சரியான நேரத்தில் கவனித்தனர் இதனால் ரயில்கள் உடனடியாக நிறுத்தப்பட்டு, மோதல் தடுக்கப்பட்டது
இந்த குளறுபடிக்கு சிக்னல், தகவல் தொடர்பு அல்லது செயல்பாட்டு ரீதியான குறைபாடுகள் ஏதேனும் உள்ளனவா என்பதைக் கண்டறியவும், இரு ரயில்களும் ஒரே தண்டவாளத்தில் எப்படி வந்தன என்பதை ஆராயவும் ரயில்வே அதிகாரிகள் தீவிர விசாரணையைத் தொடங்கியுள்ளனர்




## தலைமைச் செயலகத்தில் காசநோய் ஒழிப்புத் திட்ட பணியாளர்கள் பணி நிரந்தரம் வழங்கக் கோரி மனு!

சென்னை, ஜூன்.12-
தமிழ்நாடு முழுவதும் தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்தில் (ழிஜிணிறி) பணியாற்றி வரும் பணியாளர்களுக்குப் பணி நிரந்தரம் வழங்க வேண்டும் என வலியுறுத்தித் தமிழ்நாடு காசநோய் பணியாளர்கள் நலச்சங்கம் சார்பில் சென்னை தலைமைச் செயலகத்தில் மனு அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு காசநோய் பணியாளர்கள் நலச்சங்கத்தின் தலைவர் கே. கோவிந்தராஜன், பொதுச் செயலாளர் எஸ். சிவமுருகன், பொருளாளர் கே. ஜெயபிரகாஷ் மற்றும் மாநில ஒருங்கிணைப்பாளர் எஸ். நாகராஜ் ஆகியோர் இணைந்து முதலமைச்சரின் தனிப்பிரிவில் மனுவைச் சமர்ப்பித்தனர்.
இம்மனுவில், தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்தின் கீழ் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக ஒப்பந்த மற்றும் தற்காலிக அடிப்படையில் மக்கள் நலப் பணியில் ஈடுபட்டு வரும் ஊழியர்களின் அர்ப்பணிப்பான சேவையைக் கருத்தில் கொண்டு, அவர்களின் பணி பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்யும் வகையில் தமிழக அரசு உடனடியாகப் பணி நிரந்தரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், பொதுச் சுகாதாரத் துறையில் முக்கிய பங்காற்றி வரும் இவர்களின் நீண்டகால கோரிக்கையைத் தமிழக அரசு பரிசீலித்து அவர்களின் நலனைப் பாதுகாக்கும் வகையில் உரிய போர்க்கால நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது உட்படப் பல்வேறு முக்கியக் கோரிக்கைகள் ஒருமனதாக முன்வைக்கப்பட்டு மனுவாக நிறைவேற்றப்பட்டன.

## மேகாலயா அமைச்சர், அதிகாரிகள் 6 மாதம் வெளிநாடு செல்ல தடை




ஷில்லாங், ஜூன்.12-
மேகாலயா மாநில அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் அடுத்த 6 மாதங்களுக்கு வெளிநாடு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை மேகாலயா மாநில அரசு நேற்று அறிவிக்கையாக வெளியிட்டுள்ளது.மாநில அரசின் செலவுகளை குறைக்கும் பொருட்டு அமைச்சர்கள், எம்எல்ஏக்கள், அரசு அதிகாரிகள் ஆகியோர் அடுத்த 6 மாதங்களுக்கு வெளிநாடு செல்லக்கூடாது. புவிசார் அரசியல் பதற்றங்கள் மற்றும் அந்நியச் செலாவணி வளங்கள் மீதான அழுத்தம் உள்ளிட்ட உலகளாவிய பொருளாதார நிச்சயமற்ற சூழலில், பொது நலன் கருதி இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அமைச்சர்கள், சட்டப்பேரவை உறுப்பினர்கள் மற்றும் மாநில அரசு அதிகாரிகள் ( நிரந்தர அல்லது ஒப்பந்தப் பணியாளர்கள் ) மேற்கொள்ளும் அனைத்து அதிகாரப்பூர்வ வெளிநாட்டுப் பயணங்களையும் ஆறு மாதங்களுக்கு நிறுத்திவைக்குமாறு ஆளுநர் தரப்பில் உத்தரவு வந்துள்ளது. பொது நலன் கருதியும், சிக்கன நடவடிக்கைகளைக் கடைப்பிடிக்கும் நோக்கத்துடனும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.இந்த அறிவிக்கையின் விளைவாக, பல்வேறு துறைகளைச் சேர்ந்த சுமார் 68 அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் பங்கேற்கவிருந்த 8 வெளிநாட்டுப் பயிற்சிப் பயணங்கள், அனுபவப் பரிமாற்றத் திட்டங்களுக்கான பயணங்கள் ஆகியவை ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்று தெரியவந்துள்ளது.

## திரிணமூல் எம்.பி. பிரகாஷ் சிக் பரைக் விலகல்: ஒரே வாரத்தில் 3 உறுப்பினர்கள் ராஜினாமா



புது டெல்லி, ஜூன்.12-
திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் பிரகாஷ் சிக் பரைக், தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். இந்த ஒரு வாரத்திற்குள் திரிணமூல் காங்கிரஸில் இருந்து ராஜினாமா செய்யும் மூன்றாவது மாநிலங்களவை உறுப்பினர் இவராவார்.
மாநிலங்களவை தலைவரும், குடியரசு துணைத் தலைவருமான சி.பி.ராதாகிருஷ்ணனுக்கு பிரகாஷ் சிக் பரைக் அனுப்பிய ராஜினாமா கடிதத்தில், 'நான் மாநிலங்களவை உறுப்பினர் பதவியிலிருந்து ராஜினாமா செய்கிறேன்; இதனை உடனடியாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். மாநிலங்களவை உறுப்பினராக எனது பதவிக்காலத்தில் அனைத்து உதவிகளையும் ஒத்துழைப்பையும் வழங்கிய தங்களுக்கும், துணைத் தலைவருக்கும் மற்றும் மாநிலங்களவை செயலகத்தின் அனைத்து அதிகாரிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார். மாநிலங்களவை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்த பின்னர் பேசிய பிரகாஷ் சிக் பரைக், "மேற்கு வங்க மக்களின் கருத்தை ஏற்று, நானும் இன்று எனது ராஜினாமா கடிதத்தை சமர்ப்பித்துள்ளேன்" என்றார். பாஜகவில் இணையப் போகிறீர்களா என்று கேள்விக்கு, "காலம்தான் பதில் சொல்லும்" என்று அவர் கூறினார்.சமீபத்தில் நடந்துமுடிந்த மேற்குவங்க சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜக வெற்றி பெற்றது. 15 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த திரிணமூல் காங்கிரஸ் கட்சி 80 தொகுதிகளை மட்டுமே கைப்பற்றியது. தேர்தல் தோல்வி ஒருபுறம் அழுத்த, மம்தா பானர்ஜிக்கு எதிராக ரிதப்ரதா பானர்ஜி தலைமையில் 61 எம்எல்ஏக்கள் மேற்கு வங்க சட்டப்பேரவையில் செயல்பட்டு வருகின்றனர். அதிக உறுப்பினர்கள் ஆதரவு உள்ளதால் ரிதப்ரதா பானர்ஜி சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவராக தேர்வானார்.மம்தாவின் நம்பிக்கைக்குரியவரான சுகேந்து சேகர் ராய் மாநிலங்களவை உறுப்பினர் பதவியிலிருந்து சமீபத்தில் விலகினார். அதன்பின்னர் சுஷ்மிதா தேவ் மாநிலங்களவை எம்.பி பதவியிலிருந்து நேற்று விலகி திரிணமூல் காங்கிரஸ் கட்சிக்கு அதிர்ச்சி கொடுத்தார். இந்தச் சூழலில் மூன்றாவது நபராக பிரகாஷ் சிக் பரைக் இன்று தனது மாநிலங்களவை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

## "சென்னை மாநகராட்சி மருத்துவப் பணியாளர்களுக்கு மே மாத ஊதியத்தை உடனடியாக வழங்குக" அன்புமணி



சென்னை, ஜூன்.12-
சென்னை நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றும் ஒப்பந்த மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட மருத்துவப் பணியாளர்களுக்கு மே மாத ஊதியத்தை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "சென்னை பெருநகர மாநகராட்சிக்குட்பட்ட நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றும் ஒப்பந்த மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட மருத்துவப் பணியாளர்களுக்கு மே மாத ஊதியம் இன்று வரை வழங்கப்படாததைக் கண்டித்து அவர்கள் சென்னை மாநகராட்சி அலுவலகமான ரிப்பன் மாளிகையை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தியுள்ளனர். உழைத்த ஒப்பந்தப் பணியாளர்களுக்கு 10 நாட்களுக்கு மேலாகியும் ஊதியம் வழங்கப்படாதது கண்டிக்கத்தக்கது.மருத்துவப் பணியாளர்களின் போராட்டத்தால் சென்னையில் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களில் இன்று காலை முதல் மருத்துவ சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. மாநகராட்சியின் தவறால் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுவதை அனுமதிக்கக் கூடாது.மருத்துவப் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படாததற்கு செயலியில் ஏற்பட்ட தொழில்நுட்பக் குறைபாடு உள்ளிட்ட பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. காரணம் எதுவாக இருந்தாலும் உழைத்த பணியாளர்களுக்கு ஊதியத்தை நிறுத்தி வைப்பதோ, வழங்க மறுப்பதோ நியாயமல்ல; அது மனித உரிமைகளுக்கு எதிரானது. எனவே, சென்னை மாநகராட்சி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றும் மருத்துவப் பணியாளர்களுக்கு மே மாத ஊதியத்தை உடனடியாக வழங்க மாநகராட்சி நடவடிக்கை எடுக்க வேண்டும். பணி நிலைப்பு உள்ளிட்ட அவர்களின் பிற கோரிக்கைகளையும் மாநகராட்சியும், அரசும் இணைந்து நிறைவேற்ற வேண்டும்" இவ்வாறு அவர் வலியுறுத்தியுள்ளார்.



## திசையன்விளையில் பாஜாகவினர் அதிக நாட்கள் ஆட்சி செய்த பிரதமர் மோடியைப் பாராட்டிப் பட்டாசு முழக்கம்!

திசையன்விளை, ஜூன்.12- திசையன்விளையில் பாரதப் பிரதமர் நரேந்திர மோடி ஆட்சிக்கு வந்து, அதிக நாட்கள் நாட்டை ஆண்ட பிரதமர் என்ற பெருமையையும், வரலாற்றுச் சாதனையையும் பெற்றதைக் கொண்டாடும் விதமாக, ராதாபுரம் வடக்கு ஒன்றிய பாஜாக சார்பில் திசையன்விளை காமராஜ் சிலை முன்பு மாவட்டத் துணைத் தலைவர் ஜெகநாதன் தலைமையில் இனிப்பு வழங்கியும், பட்டாசு வெடித்தும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.இம்மாபெரும் சாதனை விளக்கக் கொண்டாட்டப் பேரணிக்கு பாஜாக நெல்லை மாவட்டத் தலைவர் தமிழ்ச்செல்வன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு சிறப்பித்தார். இக்கூட்டத்தில் ராதாபுரம் வடக்கு ஒன்றியப் பொறுப்பாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் பாஜாக தொண்டர்கள் உட்படப் பலர் திரளாகக் கலந்துகொண்டு, பிரதமர் மோடியின் மக்கள் நலத் திட்டங்களையும் சாதனைகளையும் பொதுமக்களுக்கு எடுத்துரைத்துத் தங்களின் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

## பாலமேட்டில் தவெக எம்எல்ஏ கருப்பையா விசிட்!" 15 வார்டுகளிலும் மக்களுக்கு நன்றி தெரிவித்து மனு ஏற்பு!

அலங்காநல்லூர், ஜூன்.12- மதுரை மாவட்டம் பாலமேடு பேரூராட்சிப் பகுதியில் 15 வார்டு பொதுமக்களுக்கும் நேரில் சென்று நன்றி தெரிவித்த சட்டமன்ற உறுப்பினர் கருப்பையா, அவர்களிடம் பல்வேறு கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டார். பாலமேடு பேரூந்து நிலையத்தில் விவசாய சங்க நிர்வாகிகள் நல்லமணிகாந்தி, அழகர்சாமி, தங்கராச ஆகியோர் தேசிய சுட்டுறவு சர்க்கரை ஆலையை மீண்டும் இயக்க நடவடிக்கை எடுக்கக் கோரி அவரிடம் மனு அளித்தனர்.தொடர்ந்து பாலமேடு, கோணப்பட்டி, சின்னபாலமேடு, சுக்காம்பட்டி உள்ளிட்ட



பகுதிகளுக்குச் சென்ற சட்டமன்ற உறுப்பினருக்குப் பொதுமக்கள் ஆரத்தி எடுத்தும், கைத்தறி ஆடை அணிவித்தும் உற்சாக வரவேற்பு அளித்தனர். அப்பகுதி சாக்கடை வசதி, குடிநீர், தெருபாலம், தடையில்லா மின்சாரம், சாலை வசதி, பள்ளி மாணவமாணவிகளுக்கான பேருந்து வசதி மற்றும் அரசுப் பள்ளி கட்டடங்கள் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றக் கோரிப் பொதுமக்கள் வழங்கிய மனுக்களைப் படித்துப் பார்த்த அவர், அரசு அலுவலர்களை உடனடியாகத் தொடர்புகொண்டு இப்பணிகளை விரைந்து முடிக்க ஆலோசனை வழங்கினார். மேலும், பொதுமக்களிடம் எந்தக் குறை என்றாலும் தனது அலைபேசி எண்ணைத் தொடர்பு கொள்ளலாம் என்றும், உங்களுக்காகச் சட்டமன்றத்தில் தளபதி விஜய்யிடம் கேட்டுப் பெற்றுத் தருவது எனது கடமை என்றும் அவர் குறிப்பிட்டார். தமிழக வெற்றிக் கழக ஒன்றிய செயலாளர் விஜய்ஹரிஷ், பேரூர் செயலாளர் புகழ், வடக்கு ஒன்றிய நிர்வாகி தனசேகரன், வாடிப்பட்டி ஒன்றிய செயலாளர் தமிழன்தாமு, மேற்கு ஒன்றிய செயலாளர் சரவணன் மற்றும் நிர்வாகிகள் பரத், முருகன், மாணிக்கம் உட்படப் பலர் கலந்து கொண்ட இச்சுற்றுப்பயணத்தின் இடையே, வடக்கு ஒன்றிய நிர்வாகி தனசேகரனின் பிறந்தநாளை முன்னிட்டுச் சின்னபாலமேடு பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் கருப்பையா தலைமையில் கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது என்பது உட்படப் பல்வேறு நிகழ்வுகள் செய்தியாகத் தொகுக்கப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.



■ தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அசோக்குமார், உத்தரவின் பேரில் ஏஎஸ் பி மதியழகன் தலைமையில் பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், குற்ற செயல்களை தடுக்கவும் தென்காசி மாவட்டம் முழுவதும் நடைரோந்து பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக புளியங்குடி பகுதியில் காவல் ஆய்வாளர் சியாம் சுந்தர், காவல் உதவி ஆய்வாளர் பவுல், 20க்கும் மேற்பட்ட தென்காசி ஆயுத சிறப்பு படை போலீசார் அணிவகுப்பில் கலந்து கொண்டனர்.

## கோயம்பேடு பேருந்து நிலையத்தை மீண்டும் திறக்க வேண்டும்: ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் சங்கம் கோரிக்கை

சென்னை, ஜூன்.12- பயணிகள் நலன் கருதி கோயம்பேடு பேருந்து நிலையத்தை மீண்டும் திறக்க வேண்டும் என அனைத்து ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தால் சென்னைக்குள் போக்குவரத்து நெரிசல் அதிகரித்துள்ளது. இதனால் 1 பேருந்தில் செல்ல வேண்டிய 40 பயணிகள் 40 தனியார் வாகனத்தில் கிளாம்பாக்கம் வரை செல்கிறார்கள். இந்த நிலையில், தலைமைச் செயலகத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சர் பார்த்திபனை இன்று சந்தித்த பிறகு அனைத்து ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் சங்கத் தலைவர் அன்பழகன் செய்தியாளர்களை சந்தித்தார்.அப்போது மிகப்பெரிய பேருந்து நிலையமான கோயம்பேடு பேருந்து நிலையத்தை மீண்டும் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்று தமிழ்நாடு அரசிடம் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகிறோம். இது சென்னை மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாகவும் உள்ளது. கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் ஆம்னி பேருந்துகளுக்கான நுழைவுக் கட்டணம் ரூ.150 ஆக உள்ளது. இதை ரூ.500 ஆக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. கட்டணத்தை இவ்வளவு அதிகமாக உயர்த்தக் கூடாது. மேலும், போக்குவரத்துத் துறையின் அனைத்து சேவைகளும் முழுமையாக ஆன்லைன் முறைக்கு மாற்றப்பட வேண்டும். ஆன்லைன் சேவைகள் மூலம் இடைத்தரகர்கள் மற்றும் தேவையற்ற தாமதங்களை தவிர்க்க முடியும். குறிப்பாக வாகனங்களுக்கான சிறப்பு எண் ஒதுக்கீட்டு நடைமுறையை ஆன்லைன் மூலம் செயல்படுத்தியிருப்பதை வரவேற்கிறோம். முன்பு சிறப்பு எண் பெற டீலர்கள், ஏஜெண்டுகள் உள்ளிட்டோரின் உதவியை நாட வேண்டிய சூழல் இருந்தது. அதற்காக ரூ.7,000 முதல் ரூ.15,000 வரை கூடுதல் செலவாகி வந்தது. எந்த இடைத்தரகரும் இல்லாமல் நேரடியாக விண்ணப்பித்து பெறும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது என தெரிவித்தார்

### தி.நகரில் 1 கிலோ தங்கம், வைர நகைகள் திருட்டு

## கொள்ளையன் தப்பிய நிலையில் நகைகளை மறைத்த மனைவி கைது

சென்னை, ஜூன்.12- தி.நகரில் 1 கிலோ தங்கம், வைர நகைகள் திருடப்பட்ட வழக்கில், கொள்ளையன் தப்பிய நிலையில், நகைகளை மறைத்து வைத்த அவரது மனைவி கைது செய்யப்பட்டார்.தி.நகர், திலக் தெரு, பாலாஜி அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வருபவர் சுஜாதா (60). அதே பகுதியில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் அதிகாரியாக பணியாற்றுகிறார். கடந்த 1ம் தேதி காலை வீட்டை பூட்டி விட்டு வழக்கம்போல் அலுவலகத்துக்குச் சென்றார். வெளியூர் சென்ற அவரது கணவர் வெங்கடேஷ்வர ராவ் 4 நாட்களுக்கு பிறகு, அன்றைய தினம் மதியம் வீட்டுக்கு திரும்பி வந்து பார்த்தபோது வீட்டின் கதவு உடைக்கப்பட்டிருந்தது.மேலும், படுக்கையறையில் இருந்த அலமாரி உடைக்கப்பட்டு அதிலிருந்த 1 கிலோ தங்கம், வைர நகைகள் மற்றும் வெள்ளிப் பொருட்கள் திருடுபோனது தெரியவந்தது. இதுகுறித்து, பாண்டிபஜார் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். முதல்கட்டமாக, சம்பவ இடம் மற்றும் அதை சுற்றியிருந்த சிசிடிவி கேமரா பதிவுகளை போலீஸார் ஆய்வு செய்ததில், நகை திருட்டில் ஈடுபட்டது தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூரில் உள்ள தளவாய்புரத்தைச் சேர்ந்த பிரபாகரன் என்பது தெரியவந்தது. இதையடுத்து, போலீஸார் அங்கு சென்று தேடினர். இதையறிந்த, பிரபாகரன் கொள்ளையடித்த நகைகளின் ஒரு பகுதியை மனைவி சுமதியிடம் (47) கொடுத்து விட்டு தப்பினார்.இதையடுத்து, திருட்டு நகைகளை வாங்கி மறைத்து வைத்த சுமதியை போலீஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர். அவரிடமிருந்து 96 சவரன் தங்க நகைகள் மற்றும் 780 கிராம் வெள்ளிப் பொருட்கள் மீட்கப்பட்டது. மேலும், தலைமறைவாக உள்ள அவரது கணவர் பிரபாகரனை தனிப்படை அமைத்து போலீஸார் தேடி வருகின்றனர்.



## தமிழ்நாட்டில் வெவ்வேறு இடங்களில் நடந்த சாலை விபத்துகளில் 8 மாணவர்கள் உயிரிழந்ததால் சோகம்

மன்னார்குடி, ஜூன்.12- தமிழ்நாட்டில் வெவ்வேறு இடங்களில் நடந்த சாலை விபத்துகளில் 8 மாணவர்கள் உயிரிழந்ததால் சோகம் ஏற்பட்டுள்ளது. மன்னார்குடி சாலை விபத்தில் 4 மாணவர்களும், உளுந்தூர்பேட்டையில் 2 மாணவர்களும், தூத்துக்குடியில் 2 மாணவர்களும் உயிரிழந்தனர். திருவாரூர்திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அருகே உள்ள காரக்கோட்டை என்ற பகுதியில் அரசு பள்ளி மாணவர்கள் பள்ளி முடிந்து மாணவர்கள் வீடுகளுக்கு திரும்பிக்கொண்டிருந்தனர். அப்போது அதிவேகமாக வந்த கார் எதிர்பாராதவிதமாக சாலையோரம் நடந்து சென்ற பள்ளி மாணவர்கள் மீது வேகமாக மோதியது.இந்த விபத்தில் 4 மாணவர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். கார் ஓட்டுநர் உலகநாதனை போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். கார் மோதி 4 பள்ளி மாணவர்கள் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. உளுந்தூர்பேட்டைஅதேபோல் உளுந்தூர்பேட்டை அருகே நெடுஞ்சாலையில் இருசக்கர வாகனம் மீது கார் மோதிய விபத்தில் 2 பள்ளி மாணவர்கள் உயிரிழந்தனர். உளுந்தூர்பேட்டை அருகே மேட்டத்தூர் பகுதியில் நெடுஞ்சாலையில் ஒரே பைக்கில் சென்ற 5 பள்ளி மாணவர்கள் பள்ளி முடிந்து வீடு திரும்பும் போது எதிரே வந்த கார் மோதி இரு மாணவர்கள் நிகழ்விடத்திலேயே உயிரிழந்த துயரம் ஏற்பட்டது. இருசக்கர வாகனம் மீது கார் மோதிய விபத்தில் ஜஸ்டின், புருனோ ஆகிய இரு தனியார் பள்ளி மாணவர்கள் உயிரிழந்தனர். ஆலன், சுஜித், அஜய் ஆகிய 3 மாணவர்கள் படுகாயத்துடன் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். சாலை விபத்து நடைபெற்ற மேட்டத்தூர் பகுதியில் உறவினர்கள் சாலை மறியலில் ஈடுபட்டு உள்ளனர், தேசிய நெடுஞ்சாலையில் தற்போது கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. தூத்துக்குடி மேலும் கருங்குளம் அருகே தனியார் பேருந்தும் பைக் நேருக்கு நேர் மோதிய விபத்தில் பைக்கில் சென்ற இளைஞர்கள் இருவர் நிகழ்விடத்திலேயே உயிரிழந்துள்ளனர். அப்பகுதியைச் சேர்ந்த அங்கப்பன் (26) மற்றும் இசக்கிமுத்து (19) இருவரும் உயிரிழந்துள்ளனர். இந்த சம்பவம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்

## மாநகராட்சி பள்ளிகளில் 10, 12ம் வகுப்பு தேர்வுகளில் சிறப்பிடம் பிடித்த மாணவர்கள், ஆசிரியர்களுக்கு பரிசு

சென்னை, ஜூன்.12- மாநகராட்சி பள்ளிகளில் 10, 12ம் வகுப்பு தேர்வுகளில் சிறப்பிடம் படித்த மாணவர்கள், ஆசிரியர்களுக்கு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் பரிசுகளை வழங்கி கவுரவித்தார். சென்னை மாநகராட்சி பள்ளிகளில் 10,12ம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற 1,085 மாணவ, மாணவியர், அதிக மதிப்பெண்கள் பெற உறுதுணையாக இருந்த 1,005 தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் என மொத்தம், 2,090 பேருக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் விழா, ரிப்பன் மாளிகை வளாகத்தில் நடைபெற்றது.மேயர் ஆர்.பிரியா தலைமையில் நடைபெற்ற விழாவில், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் கலந்து கொண்டு, மாநகராட்சி பள்ளிகளில், 100 சதவீதம் தேர்ச்சி அளித்த 22 பள்ளிகள், 2 மேல்நிலைப் பள்ளிகள் என மொத்தம் 24 பள்ளிகளுக்கு தலா ரூ.1 லட்சம், கல்வி ஊக்கத்தொகை வழங்கினார். மேலும், தேர்ச்சி சதவீதத்தை உயர்த்திய 34 பள்ளித் தலைமையாசிரியர்கள், 12ம் வகுப்பு பொதுத் தேர்வில் 600க்கு 500 மதிப்பெண்களுக்கு மேல் பெற்ற 293 மாணவர்களுக்கு தலா ரூ.1,500 வீதமும், பாடவாரியாக 100 சதவீதம் தேர்ச்சி அளித்த 391 ஆசிரியர்களுக்கு தலா ரூ.3 ஆயிரம் வீதமும், ரொக்கப் பரிசுகளை வழங்கினார். இதேபோன்று 10ம் வகுப்பு தேர்வில் சிறப்பிடம் பிடித்த மாணவர்கள், ஆசிரியர்கள், பள்ளிகளுக்கும் பரிசு வழங்கப்பட்டது. இவ்விழாவில், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையர் ஜி.எஸ்.சமீரன் இணை ஆணையர் க.கற்பகம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## பனை விவசாயியை காவலர் சுட்ட வழக்கு: சிபிசிஐடி விசாரணைக்கு ஐகோர்ட் உத்தரவு


மதுரை, ஜூன்.12- பனை விவசாயியை காவலர் துப்பாக்கியால் சுட்ட வழக்கை சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றி மதுரை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தென்காசி மாவட்டம் ஆலங்குளம் அடுத்த மருதம் புத்தூரைச் சேர்ந்த பெருமாள் சேட், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், "எனது மகன் மணிகண்டன், பதநீர் இறக்கும் தொழில் செய்து வருகிறார். கடந்த ஏப்.7ல் ஆலங்குளம் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் இசக்கிராஜா மற்றும் சில போலீசார் சீருடை அணியாமல் எங்கள் வீட்டிற்கு வந்து மணிகண்டனை உடன் அழைத்துச் சென்று, பனை மரத்தில் கட்டப்பட்டுள்ள பானைகளில் கள்



உள்ளதா அல்லது பதநீர் உள்ளதா எனப் பார்க்கக் கூறியுள்ளனர். மணிகண்டன் மரம் ஏறும் போது சார்பு ஆய்வாளர் இசக்கிராஜா சாதிப் பெயரைச் சொல்லி திட்டினார். இதனை அங்க நின்றிருந்த நான் மற்றும் எனது பேத்தி ஆகியோர் தட்டிக்கேட்டோம். எங்களை போலீசார் மிரட்டினர். மணிகண்டன் மரத்தில் இறங்கி வந்த போது அவரை சார்பு ஆய்வாளர் துப்பாக்கியால் சுட்டார். இதில் மணிகண்டனின் இரு கால்களிலும் பலத்த காயம் ஏற்பட்டது. அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பாக போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். உள்ளூர் போலீஸார் விசாரித்தால் எங்களுக்கு நியாயம் கிடைக்காது. எனவே என் மகன் போலீஸாரால் சுடப்பட்ட வழக்கு விசாரணையை சிபிஐ அல்லது வேறு விசாரணை அமைப்புக்கு மாற்றவும், அதுவரை விசாரணைக்கு தடை விதித்தும் உத்தரவிட வேண்டும்." இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது. இந்த மனு நீதிபதி புகழேந்தி முன்பு இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரரின் கோரிக்கை ஏற்றுக்கொண்ட நீதிபதி, விவசாயி மீது துப்பாக்கியால் சுட்ட வழக்கை சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றி உத்தரவிட்டார்.

## ஓமன் அருகே அமெரிக்க தாக்குதலுக்கு உள்ளான கப்பலில் 3 இந்திய மாலுமிகள் உயிரிழப்பு

புதுடெல்லி, ஜூன்.12- ஓமன் அருகே அமெரிக்க படையினரால் தாக்கப்பட்ட கப்பலில் இருந்த 3 இந்திய மாலுமிகள் உயிரிழந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது. எம்.டி. செட்டெபெல்லோ கப்பலில் பணிபுரிந்த 3 மாலுமிகள் காணாமல் போனதாக கூறப்பட்ட நிலையில், அவர்கள் மூவரும் உயிரிழந்துவிட்டதாக இந்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் சர்பானந்த சோனாவால் உறுதிப்படுத்தி உள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "அரம்பத்தில் காணாமல் போனதாகக் கூறப்பட்ட இந்திய மாலுமிகள் மூவரும் உயிரிழந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களின் உடல்கள்



கண்டெடுக்கப்பட்டு அடையாளம் காணப்பட்டுள்ளன. இது நமது கடல்சார் சமூகத்துக்கு ஒரு பேரிழப்பு. கடினமான இந்த தருணத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருடன் மோடி அரசு உறுதியாக நிற்கிறது. அவர்களின் குடும்பத்தினருக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க அரசு முழுமையாக உறுதிபூண்டுள்ளது. மீட்கப்பட்ட கப்பல் ஊழியர்களை உடனடியாக தாயகம் அழைத்து வர உத்தரவிட்டுள்ளேன். மேலும், உயிரிழந்தவர்களின் உடல்களை அவர்களின் குடும்பத்தினரிடம் ஒப்படைக்க விரைவாகக் கொண்டு வருமாறும் உத்தரவிட்டுள்ளேன்" என தெரிவித்துள்ளார். அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து ஈரான் மீது தாக்குதல் நடத்தத் தொடங்கியதை அடுத்து, ஹார்முஸ் ஜலசந்தியை மூடுவதாக ஈரான் அறிவித்தது. ஈரானின் இந்த நடவடிக்கைக்கு எதிராக அமெரிக்கா தனது கடற்படை மூலம் அப்பகுதியை முற்றுகையிட்டது. இதன்மூலம், ஈரான் கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தியை கடப்பது தடுக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, சில நாடுகளின் கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தியை கடந்து செல்ல அனுமதிக்கப்பட்டன.இந்நிலையில், ஓமன் கடற்கரை அருகே சென்றுகொண்டிருந்த பலாவு நாட்டின் கொடி ஏற்றப்பட்ட கப்பல் மீது அமெரிக்க கடற்படை தாக்குதல் நடத்தியது. ஈரான் துறைமுகங்கள் மீது அமெரிக்கா விதித்துள்ள தடையை அந்தக் கப்பல் மீறியதாகவும், அமெரிக்க படைகளின் உத்தரவுகளை கப்பல் ஊழியர்கள் தொடர்ந்து புறக்கணித்ததாகவும், இதன் காரணமாக அந்தக் கப்பலின் இயந்திர அறையை அமெரிக்க விமானம் துல்லியமாக தாக்கியதாகவும் அமெரிக்க மத்திய கட்டளைப் பிரிவு நேற்று (புதன்கிழமை) தெரிவித்தது. இந்தத் தாக்குதலுக்கு நேற்று கடும் கண்டனம் தெரிவித்திருந்த இந்திய வெளியுறவு அமைச்சகம், அமெரிக்காவின் தூதரகப் பொறுப்பாளரை நேரில் வரவழைத்து தனது எதிர்ப்பை பதிவு செய்தது. இதன் தொடர்ச்சியாக இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், "ஓமன் கடற்கரைக்கு அருகே செட்டெபெல்லோ என்ற வர்த்தக கப்பல் மீது நடத்தப்பட்ட தாக்குதலை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். கப்பலில் இருந்த 24 இந்திய பணியாளர்களில் 21 பேர் மீட்கப்பட்டுள்ளனர். மூவர் காணாமல் போனதாக தெரிவிக்கப்பட்டுள்ளது" என தெரிவித்திருந்தது. இந்நிலையில், அந்த மூவரும் உயிரிழந்ததை மத்திய அமைச்சர் சர்பானந்த சோனாவால் உறுதிப்படுத்தி உள்ளார்.



# உடுமலையில் அதிமுக ஆலோசனைக் கூட்டம்!" 1 மற்றும் 2வது வார்டுகளில் தேர்தல் வியூகம்

உடுமலைப்பேட்டை, ஜூன்.12-
அஇஅதிமுக கழக பொதுச் செயலாளர் எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்களின் ஆணைக்கிணங்க, திருப்பூர் புறநகர் மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான திருப்பூர் சிவசாமி ஆலோசனையின்படி, உடுமலை நகர அஇஅதிமுக சார்பில் 1 மற்றும் 2வது வார்டுகளுக்கான முக்கிய ஆலோசனைக் கூட்டம் உடுமலையில் நடைபெற்றது. 2வது வார்டு கிளைக் கழக செயலாளர் ஆர். ரங்கராஜ் முன்னிலை வகித்தார். இம்மாபெரும் ஆலோசனைக் கூட்டத்தில், கழகத்தின் உள்கட்டமைப்பை வலுப்படுத்தும் விதமாகப் புதிய பொறுப்பாளர்கள் நியமனம் செய்வது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.
இந்நிகழ்வில் சார்பு அணி மாவட்ட செயலாளர் எஸ்.எம். நாகராஜ், யூ.கே.பி. ராதாகிருஷ்ணன், டாக்டர் தங்கராஜ், நகர பொருளாளர் விஸ்வநாதன், மாவட்ட பிரதிநிதி மளிகை செல்வராஜ், நகர கழக இணைச்செயலாளர் சந்திரிகா (எக்ஸ் எம்.சி), நகர்மன்ற உறுப்பினர்கள் சௌந்தரராஜன், சகுந்தலா, 21வது வார்டு செயலாளர் ராஜசேகர், அம்மா பேரவை இணைச்செயலாளர் பேப்பர் குணா மற்றும் கே. சக்திவேல், ஏ. கனகராஜ், எஸ். குமாரசாமி உள்ளிட்ட கழக முக்கிய நிர்வாகிகள், சார்பு அணி பொறுப்பாளர்கள் மற்றும் தொண்டர்கள் எனப் பலரும் திரளாகக் கலந்துகொண்டனர்.



■ தென்காசி மாவட்டம், இலஞ்சி பேரூராட்சிக்கு உட்பட்ட கள்ளிகுளம் பொதுப்பணித்துறை குளத்தில் மூலதன மானிய நிதி (202425) திட்டத்தின் கீழ் ரூ.3.72 கோடி மதிப்பீட்டில் 2 கிணறுகள் அமைக்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, தென்காசி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வல்லம் ஊராட்சியில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் Peri Urban திட்டத்தின் கீழ் ரூ.19 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டு வருவதை மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப. பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.இந்நிகழ்வில். இலஞ்சி பேரூராட்சி செயல் அலுவலர் அமானுல்லா,உதவிப் பொறியாளர் மாரியப்பன், இலஞ்சி பேரூராட்சி துணைத்தலைவர் முத்தையா மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.



# தென்காசி மாவட்டம்சங்கரன்கோவில் எழில்நகர் சித்தி விநாயகர் கோவில் கும்பாபிஷேக விழா

சங்கரன்கோவில், ஜூன்.12-
சங்கரன்கோவில் எழில்நகரில் அமைந்துள்ள சித்தி விநாயகர் கோவில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு, மங்கல இசையுடன் சிறப்பு ஹோமங்களும், அதனைத் தொடர்ந்து திருமறை பாராயணம் மற்றும் சிறப்பு முதலாம் கால யாகசாலை பூஜைகளும் தொடங்கின. கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இன்று காலை இரண்டாம் கால யாகசாலை பூஜையும், அதனைத் தொடர்ந்து மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதனை தொடர்ந்து விநாயகருக்கு சிறப்பு அபிஷேகங்களும், அலங்காரங்களும், தீபாராதனைகளும் நடைபெற்றது.அதனை தொடர்ந்து பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். விழா ஏற்பாடுகளை விழா கமிட்டியினர் மற்றும் எழில் நகர் பொதுமக்கள் செய்து இருந்தனர்.



■ இராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் சதீஷ் கிறிஸ்டோபரிடம் திசையன்விளை பேரூராட்சி மக்கள் சந்தித்துக் கொண்டிருக்கும் பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டிட பாரதிய ஜனதா கட்சி பிரமுகர் சக்திவேல் மனு அளித்த பொழுது..

# பக்தர்களின் தாகம் தீர்த்த தவெக! ருத்ர காளியம்மன் கோவில் திருவிழாவில் பிரம்மாண்ட நீர்மோர் பந்தல்!

திண்டுக்கல், ஜூன்.12-
திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கரிசல்பட்டி ஊராட்சியில் அமைந்துள்ள அருள்மிகு ருத்ர காளியம்மன், பகவதி அம்மன் திருக்கோவில் உற்சவத் திருவிழாவை முன்னிட்டு, பொதுமக்களின் தாகம் தீர்க்கும் பொருட்டுத் தமிழக வெற்றிக்கழகத்தின் சார்பில் அமைக்கப்பட்ட பிரம்மாண்ட நீர்மோர் பந்தல் திறப்பு விழா நடைபெற்றது. திருவிழாவிற்கு வருகை தரும் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையிலும் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இம்மாபெரும் நீர்மோர்



பந்தல் திறப்பு விழாவிற்குத் தமிழக வெற்றிக்கழகத்தின் திண்டுக்கல் மத்திய மாவட்டச் செயலாளர் எம்.எல். வாசுதேவன் தலைமை தாங்கி, பந்தலைத் திறந்து வைத்துப் பொதுமக்களுக்கு நீர்மோர் வழங்கினார்.இந்நிகழ்வில் ரெட்டியார்சத்திரம் மத்திய ஒன்றிய செயலாளர் தமிழரசன், கரிசல்பட்டி ஊராட்சி செயலர் கர்ணன், ஒன்றிய பொறுப்பாளர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் கரிசல்பட்டி கிளை நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இத்தண்ணீர் பந்தல் ஏற்பாடுகளைத் தவெக ரெட்டியார்சத்திரம் துணைச் செயலாளரும் மகளிர் அணி செயலாளருமான திவ்யா சுரேஷ், செயற்குழு உறுப்பினர் ஜோயல் எலிசன் மற்றும் கழக நிர்வாகி சந்தோஷ் ராஜா ஆகியோர் இணைந்து மிகச் சிறப்பான முறையில் ஒருங்கிணைத்திருந்தனர். திருவிழாவிற்கு வந்திருந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் இந்த நீர் மோரைக் குடித்துப் பயன்பெற்றதுடன், தவெகவினரின் இந்தச் சமூக நலச் சேவையைப் பாராட்டிச் சென்றனர்.




# நெல்லையில் கங்கைகொண்டான் சிப்காட் நிறுவனங்களின் மீட்டிங்!" தொழிலாளர் நலன் காக்க ஆலோசனைக் கூட்டம்!

நெல்லை, ஜூன்.12-
நெல்லையில் கங்கைகொண்டான் சிப்காட் தொழில் நிறுவனங்களின் ஆலோசனைக் கூட்டம் சங்கத் தலைவர் அந்தோணி தாமஸ் தலைமையில் நடைபெற்றது. இதற்குச் செயலாளர் குஞ்சரமணி முன்னிலை வகிக்க, பொருளாளர் ராஜ் குமார் அனைவரையும் வரவேற்றார். இக்கூட்டத்தில் சங்க நிர்வாகிகள் மற்றும் சிப்காட் தொழில் நிறுவன உரிமையாளர்கள் உட்பட பலர் திரளாகக் கலந்து கொண்டனர். தொடர்ந்து நடைபெற்ற ஆலோசனையில், சிப்காட் தொழில் நிறுவனங்கள் அனுமதி குறித்து வழிகாட்டி மைய அலுவலர் சுரேஷ் அவர்களும், வங்கி கடன் உதவிகள் குறித்து ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா கிளை மேலாளர் கோமதி அவர்களும் விரிவாகப் பேசினர்.இக்கூட்டத்தில், கங்கைகொண்டான் நகரின் வளர்ச்சிக்காகக் கல்வி, மருத்துவம், குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மேம்படுத்த வேண்டும் என்றும், தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு கங்கைகொண்டான் ரயில் நிலையத்தில் முக்கியப் பயணிகள் ரயில்கள் அனைத்தையும் நிறுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. மேலும், சிப்காட் பகுதியில் புகையிலைப் பொருட்களின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்த வேண்டும், 'சிங்கப்பெண்' திட்டத்தின் மூலம் பெண் தொழிலாளர்களின் பாதுகாப்பை மேலும் மேம்படுத்த வேண்டும் மற்றும் தொழிலாளர்களின் மருத்துவ நலனைக் கருத்தில்கொண்டு முழுமையான இஎஸ்ஐ மருத்துவமனை மற்றும் இஎஸ்ஐ கிளை அலுவலகத்தை அங்கு அமைக்க வேண்டும் என்பது உட்படப் பல்வேறு முக்கியத் தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.




# கலைஞரின் 103வது பிறந்தநாள் விழா! திருப்பூர் மடத்துக்குளத்தில் ஏழைகளுக்குப் அன்னதானம்!

திருப்பூர், ஜூன்.12-
தமிழக முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞரின் 103 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் தொகுதியில் ஏழைகளுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் பிரம்மாண்ட அன்னதான விழா மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட மைவாடி அன்னை தெரசா அறக்கட்டளையின் பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் திருப்பூர் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு, மாவட்ட மீனவர் அணி எ.டி.வாசு அவர்கள் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினர் இரா. ஜெயராமகிருஷ்ணன், உடுமலை சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் மு.ஜெயகுமார் ஆகியோர் முன்னிலையில், முதியோர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டதோடு வேட்டி, சேலை, பெட்சீட் மற்றும் மளிகைப் பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் தாராளமாக வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் ஆதி திராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் சுப்பம்பட்டி ஆர்ச்சாமி, ஒன்றிய செயலாளர்கள் எம்.ஆர்.பாலு, சாகுல் அமீது, செழியன், மாரிமுத்து, செந்தில்குமார், உடுமலை நகர கழக வேலுச்சாமி மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், மைவாடி கழகப் பொறுப்பாளர்கள் கே.முருகன், செந்தில் ராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் உட்படப் பலர் திரளாகக் கலந்து கொண்டனர் என்பது உட்படப் பல்வேறு முக்கியத் தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.



■ இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ், முன்னிலையில், மதுரை மாவட்டம், அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் குடமுழுக்கு தொடர்பான முன்னேற்பாடு கூட்டம் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன் மாநகர காவல் துணை ஆணையர் (மதுரை தெற்கு) ஏ.ஜி.இனிகோ திவ்யன் உதவி ஆட்சியர் (பயிற்சி) சித்தார்த் போகர்னா, அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் இணை ஆணையர் சுரேஷ அறங்காவலர் குழுத் தலைவர் ருக்மணி பழனிவேல்ராஜன், உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உடன் உள்ளனர்.



■ இராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் சதீஷ் கிறிஸ்டோபரிடம் திசையன்விளை பேரூராட்சி மக்கள் சந்தித்துக் கொண்டிருக்கும் பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டிட பாரதிய ஜனதா கட்சி பிரமுகர் சக்திவேல் மனு அளித்த பொழுது..

# மாநிலங்களவை எம்.பி.யாக பிரவீன் சக்கரவர்த்தி போட்டியின்றி தேர்வு

சென்னை, ஜூன்.12-
தமிழகத்திலிருந்து மாநிலங்களவைக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் காங்கிரஸ் கட்சியை சார்ந்த பிரவீன் சக்கரவர்த்தி போட்டியின்றி தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.இது குறித்து சட்டப்பேரவைச் செயலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழ்நாட்டிலிருந்து மாநிலங்களவைக்குத் தேர்ந் தெடுக்கப்பட்ட உறுப்பினர் சி.வி.சண் முகம் 07.05.2026 அன்று தனது உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்ததால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு, தமிழ்நாடு சட்டப்பேரவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை வாக்காளர்களாகக் கொண்டு ஜூன், 2026இல் நடைபெற்ற இடைத் தேர்தலில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியை சார்ந்த பிரவீன் சக்கரவர்த்தி முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம், மயிலம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இதனால், தான் ஏற்கெனவே வகித்து வந்த மாநிலங்களவை எம்.பி. பதவியை ராஜினாமா செய்தார். இதனால், தமிழகத்தில் அந்த ஒரு இடத்துக்கான இடைத்தேர்தல் ஜூன் 18ம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.தமிழகத்தில் பிரதிநிதித்துவ அடிப்படையில் அதிக எம்எல்ஏக்களைக் கொண்ட தவெகவுக்கு மாநிலங்களவை எம்.பி. பதவி ஒதுக்கப்பட வாய்ப்பு இருந்தது. ஆனால், கூட்டணிக் கட்சியான காங்கிரஸுக்கு மாநிலங்களவை எம்.பி. இடத்தை ஒதுக்குவதாக தவெக தலைவரும், முதல்வருமான விஜய் அறிவித்தார். இதையடுத்து, மாநிலங்க ளவைத் தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளராக பிரவீன் சக்கரவர்த்தி அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.




SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000